සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ක්‍රිස්තියානි ධර්මය I
கிறிஸ்தவம் I
Christianity I

43 T I

06.08.2018 / 0830 - 1030

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பைக் குறிக்கும் பெயர்,
(1) செப்துவாஜின்த் (2) பிப்லியோன் (3) வல்கேட்
(4) மசோரா (5) கும்ரான்

**2.** இஸ்ரயேல் வரலாற்றில் வெளிப்படுத்தப்பட்ட இறைச்செயற்பாடுகள் கிறுஸ்துவின் மூலம் முழுமையடைந்த விதத்தினைக் குறிப்பிடும் திருமுகம் எது?
(1) எபிரேயர் (2) I திமோத்தேயு (3) I கொரிந்தியர்
(4) II திமோத்தேயு (5) II கொரிந்தியர்

**3.** திருவிவிலியத்தில் இறை ஏவுதல் பெற்ற எழுத்தாளர் எழுதியவற்றின் மூலம், இறை வெளிப்பாட்டைப் பெறுவோர்,
(1) இறை மக்கள் ஆவர். (2) கிறிஸ்தவ விசுவாசிகள் ஆவர்.
(3) திருவிவிலிய அறிஞர்கள் ஆவர். (4) திருவிவிலிய வாசகர்கள் ஆவர்.
(5) திருவிவிலியத்தைக் கற்பவர்கள் ஆவர்.

**4.** இயேசுவின் வாழ்க்கையோடு இணைந்து காணப்பட்ட பிரதேசமாகிய கலிலேயாவின் வடக்கு எல்லை,
(1) கார்மேல் மலைத்தொடர் ஆகும். (2) லெபனான் மலைத்தொடர் ஆகும்.
(3) எசட்ரோலோன் பள்ளத்தாக்கு ஆகும். (4) கப்பர்நாகும் ஆகும்.
(5) சீனாய் உபகண்டம் ஆகும்.

**5.** கிரேக்கப் பேரரசு காலத்தில் பலஸ்தீனாவில் யூதமதத்தை இழிவுபடுத்துவதற்காக, வேற்று மத வழிபாடுகளைப் பின்பற்றுமாறு யூத மக்களை வற்புறுத்தியவர் யார்?
(1) மகா அலெக்சாண்டர் ஆவார். (2) பொம்பே அரசன் ஆவார்.
(3) அந்தியோக்கு எப்பிபானஸ் ஆவார். (4) மகா ஏரோது ஆவார்.
(5) மட்றி ஆவார்.

[பக். 2 ஐப் பார்க்க

**6.** பஞ்சாகமத்தில் அடங்கியுள்ள மரபுகள் நான்கின் பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - ஏனைய படைப்புகளின் மீதான அதிகாரத்தை மனிதனுக்குப் பெற்றுக்கொடுத்தல்

B - உரைகளாகவும் அறிவுரைகளாகவும் எழுதப்பட்டிருத்தல்

C - தண்டம் செலுத்துவதால் பாவமன்னிப்பு கிடைத்தல்

D - அதிக கலையாற்றலைக் கொண்ட உயர்வான எபிரேய மொழி உள்ளடங்கியிருத்தல்

E - கி.மு 587 இன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டமை

இவற்றில் குருக்கள் மரபிற்குரிய பண்புகள் அடங்கிய தெரிவு எது?

(1) A, B, C. (2) B, C, D. (3) A, D, E. (4) A, C, E. (5) B, D, E.

**7.** திருவிவிலிய அறிஞர்கள் கூறுவதன்படி ஐந்நூல் உருவாக்கத்தின் அடிப்படையாக அமைந்தது,

(1) மோசேயின் படிப்பினைகளாகும்.

(2) சீனாய் உடன்படிக்கையாகும்.

(3) விடுதலைப் பயணத்தின்போது கிடைத்த மீட்பின் அனுபவங்களாகும்.

(4) குலமுதுவர்களின் காலத்தில் இடம்பெற்ற ஒருசில நிகழ்வுகளாகும்.

(5) வரலாற்றுக்கு முற்பட்ட கால நிகழ்வுகளாகும்.

**8.** திருவிவிலிய அறிஞர்கள் எடுத்துக்காட்டுவதன்படி பத்து பெரும் துன்பங்களின் கதைக்குப் பின்னணியாக அமைந்தது எது?

(1) விடுதலைப் பயண அனுபவங்கள்

(2) மோசேயால் எழுதப்பட்ட சில நிகழ்வுகள்

(3) பஞ்சாகம எழுத்தாளரின் அனுபவங்கள்

(4) யூத பாஸ்கா பற்றி எழுதப்பட்டுள்ள விடயங்கள்

(5) முற்காலத்தில் நிகழ்ந்த சில தொல்லைகள் அழிவுகள் பற்றிய வரலாற்று அனுபவங்கள்

**9.** இறைவனால் மோசேயும் ஆரோனும் அனுப்பப்பட்டனர் என்பதற்குச் சான்றாகப் பார்வோன் முன்னிலையில் இடம்பெற்ற சம்பவம்,

(1) உவர்ப்பு நீரூற்றிலிருந்து நீர் பெற்றுக்கொடுத்தமை

(2) தலைமகன் சாவு

(3) செங்கடலைக் கடந்தமை

(4) கோல், பாம்பாக மாறியமை

(5) தண்ணீர் இரத்தமாகியமை

More Past Papers at
tamilguru.lk

**10.** இறைவாக்கினரின் அழைப்பின்படி, எசாயா இறைவாக்கினரின் அழைப்பில் ‘அனுப்பப்படுதல்’ எவ்வாறு இடம்பெற்றது?

(1) “அனைத்தையும் அவர்களிடம் சொல்” என்றாகும்.

(2) மக்களுக்கு கொடுத்த செய்தி மூலமாகும்.

(3) “கிளர்ச்சி செய்யும் இனத்தாரிடையே நான் உன்னை அனுப்புகிறேன்” என்றாகும்.

(4) “நாடுகடத்தப்பட்ட மக்களிடம் போ” என்றாகும்.

(5) “எனது மக்களிடம் போ” என்றாகும்.

**11.** மெசியாவின் வருகையோடு கி.மு. 922 இல் இரண்டாகப் பிரிந்த இஸ்ரேல் அரசு மீண்டும் ஒன்றுபட்ட அரசாகும் என்பதை அறிவித்த இறைவாக்கினர் யார்?

(1) எசாயா (2) செக்கரியா (3) ஒசேயா (4) மீக்கா (5) ஆமோஸ்

[பக். 3 ஐப் பார்க்க

**12.** மெசியா எப்படியானவராக இருப்பார் என்பது பற்றி எசாயாவின் பாடல்கள் சிலவற்றில் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் தாய் வயிற்றில் உருவாகும்போதே துன்புறும் ஊழியனை அழைத்ததாக எப்பாடலில் கூறப்படுகிறது?
(1) முதலாவது பாடலில் ஆகும். (2) இரண்டாவது பாடலில் ஆகும்.
(3) மூன்றாவது பாடலில் ஆகும். (4) நான்காவது பாடலில் ஆகும்.
(5) ஐந்தாவது பாடலில் ஆகும்.

**13.** எசாயா 5:1-7 வரை பகுதியில் குறிப்பிடப்படும் "திராட்சைத் தோட்டமும் அதனை வளர்ப்போரும்" பற்றிய பாடலுக்கு அமைய திராட்சைத் தோட்டம், நட்ட கன்று, அன்பர் என்பவற்றால் அடையாளப்படுத்தப்படுவன முறையே யாவை?
(1) யூத மக்கள், இஸ்ரயேல் குடும்பத்தார், இறைவன்
(2) இஸ்ரயேல் குடும்பத்தார், யூத மக்கள், இறைவன்
(3) உலக மாந்தர், இஸ்ரயேல் குடும்பத்தார், இறைவன்
(4) இஸ்ரயேல் குடும்பத்தார், யூத மக்கள், கிறிஸ்துநாதர்
(5) உலக மாந்தர், தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள், கிறிஸ்துநாதர்

**14.** எருசலேம் தேவாலயத்தைக் கட்டுவதற்கு முன்னர் யூதமக்கள் உடன்படிக்கைப் பேழையின் அருகில் வழிபாட்டுச் சம்பிரதாயங்களை நிகழ்த்திய இடம்,
(1) சினக்கொக் ஆகும். (2) சீனாய் மலையடிவாரம் ஆகும்.
(3) கூடாரமொன்று ஆகும். (4) செபக்கூடம் ஆகும்.
(5) பெயர்சேபாவின் விசேட பலிபீடம் ஆகும்.

**15.** தூய மாற்கு தமது நற்செய்தியை எழுதுவதற்காக விடயங்களைப் பெற்றுக்கொண்ட பிரதான மூலாதாரம் எது?
(1) தூய பவுலின் போதனைகளும் படிப்பினைகளுமாகும்.
(2) தூய பேதுருவின் போதனைகளும் படிப்பினைகளுமாகும்.
(3) உரோமையில் பெற்றுக்கொண்ட விடயங்களாகும்.
(4) அருங்குறிகள் தொடர்பாக எழுதப்பட்ட ஆக்கங்களாகும்.
(5) தூய மாற்குவின் கிறிஸ்தவ சமூகத்தின் அனுபவங்களாகும்.

**16.** தூய மத்தேயு நற்செய்தியில் காணக்கிடைக்கும் வசனங்களில் மத்தேயுவுக்கு மாத்திரம் உரிய வசனங்கள்
(1) 10 % ஆகும். (2) 20 % ஆகும். (3) 30 % ஆகும். (4) 40 % ஆகும். (5) 50 % ஆகும்.

**17.** ஒத்தமை நற்செய்திகளின் ஆசிரியத்துவத்தையும் அவை எழுதப்பட்ட காலத்தையும் பற்றிய தீர்மானமாகிய 'இரு மூலக்கொள்கை' 1833 இல் முன்வைக்கப்பட்டது,
(1) ஜே. உவெய்ஸ் என்பவரால் ஆகும். (2) வெல்ஹவுசன் என்பவரால் ஆகும்.
(3) வில்ஹெல்ம ரீட் என்பவரால் ஆகும். (4) ஜே. ஹோல்ஸ்மன் என்பவரால் ஆகும்.
(5) புல்மான் என்பவரால் ஆகும்.

**18.** இறை ஆட்சியை, ஓர் அடையாளமாகக் காட்டும் உவமை,
(1) புதையல் தொடர்பான உவமையாகும்.
(2) முத்து தொடர்பான உவமையாகும்.
(3) வலை தொடர்பான உவமையாகும்.
(4) கடுகு தொடர்பான உவமையாகும்.
(5) தகரையும் கோதுமையும் தொடர்பான உவமையாகும்.

More Past Papers at
tamilguru.lk

[பக். 4 ஐப் பார்க்க

**19.** முடக்குவாதக்காரனைக் குணமாக்கிய புதுமையின் போது இறைவன் உடல் நலத்தைப் போன்று ஆன்மீக நலத்தையும் அளிக்கிறார் என இயேசு யாருக்குக் கூறினார்?
(1) மறைநூல் அறிஞர்களுக்காகும்.
(2) பரிசேயருக்காகும்.
(3) முடக்குவாதக்காரனின் உறவினர்களுக்காகும்.
(4) மற்றவர்களில் தங்கி வாழ்பவர்களுக்காகும்.
(5) அங்கு கூடியிருந்த அனைவருக்குமாகும்.

**20.** முதலாவது நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் திருச்சபை முகங்கொடுக்க நேரிட்ட பிரச்சினைகள் இரண்டாகும். அவற்றில் ஒன்று,
(1) கிறிஸ்தவம், உலகம் முடியும் வரையான மறை ஆகும்.
(2) ஆரிய பேதகம் ஆகும்.
(3) இறந்தோர் மீண்டும் உயிர்தெழுதல் பற்றிய நம்பிக்கையின்மை ஆகும்.
(4) திருச்சபையை யூதமதத்தின் ஒரு பிரிவு என ஏற்றுக்கொண்டமை ஆகும்.
(5) திருத்தொண்டர்களின் இறப்பு ஆகும்.

**21.** இயேசுவின் பாடுகள், மரணம் என்பவற்றில் உள்ளடங்கியுள்ள பிரதானமான சம்பவங்கள் வழியாக தூய மாற்கு இயேசுவைப் பற்றி வெளிப்படுத்தும் முக்கிய விடயம், அவர்
(1) மெசியா என்பதாகும். (2) ஒரு வீரன் என்பதாகும்.
(3) இறைமகன் என்பதாகும். (4) குற்றமற்ற ஒருவர் என்பதாகும்.
(5) யூதரின் அரசன் என்பதாகும்.

**22.** "அந்நாளில் நண்பகல் வேளையில் சூரியனை மறையச்செய்யவும்.... " என்று இயேசுவின் மரணத்தைப் பற்றி முன்னறிவித்த இறைவாக்கினர் யார்?
(1) எசாயா (2) மீக்கா (3) செக்கரியா (4) ஆமோஸ் (5) எரேமியா

**23.** தூய மத்தேயு நற்செய்தியின் படி அரிமத்தியா யோசேப்பு என்பவர்,
(1) இயேசுவைப் பின்பற்றிய ஒரு நபராவார்.
(2) செனட்ரீன் சபையின் ஓர் அங்கத்தவராவார்.
(3) நித்திய வாழ்வு பற்றிக் கேட்ட பரிசேயராவார்.
(4) இலாசரை உயிர்ப்பித்தது பற்றிய ஓர் சாட்சியாளராவார்.
(5) சிலுவையைச் சுமந்து செல்ல இயேசுவுக்கு உதவியவராவார்.

**24.** ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு தலைமைக் குரு முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின்போது மௌனமாக இருந்ததன் மூலம் எடுத்துக்காட்டிய விடயம்,
(1) தாம் குற்றமற்றவர் என்பதை நிருபித்தலாகும்.
(2) தனது அதிகாரத்தையும் உண்மையையும் காட்டுதலாகும்.
(3) தாம் இலௌகீக அதிகாரத்தினாலன்றி இறைவனின் வல்லமையால் நிறைந்து இருப்பதைக் காட்டுதலாகும்.
(4) தலைமைக் குருவை விட தாம் மேலானவர் என்பதைக் காட்டுதலாகும்.
(5) தாம் குருக்களின் அரசன் என்பதைக் காட்டுதலாகும்.

More Past Papers at
tamilguru.lk

**25.** தூய யோவான் 7:37-39 இன் படி இயேசு மாட்சிமைப்படுத்தப்பட்ட பின்பு ஆவியானவரை வழங்குவதாக உறுதியளிக்கிறார். அதன்படி தூய ஆவியைப் பெறுபவர்கள்,
(1) அனைத்து உலக மாந்தரும் ஆவர்.
(2) இயேசுவின் சீடர்கள் ஆவர்.
(3) இயேசுவிடம் வருபவர்கள் ஆவர்.
(4) விசுவாசத்துடன் வாழ்பவர்கள் ஆவர்.
(5) அன்புடன் வாழ்பவர்கள் ஆவர்.

**26.** தூய பவுல் எருசலேமில் புறவினத்தாரிடம் ஒப்படைக்கப்படுவார் என்பதைத் தூய ஆவியின் வழிக்காட்டலின் மூலம் வெளிப்படுத்திய இறைவாக்கினர் யார்?
(1) சிமியோன் (2) அனனியஸ் (3) அகவு
(4) பாப்பஸ் (5) நாத்தன்

**27.** பாஸ்கு விழா கொண்டாடுவது பற்றிய உரிய திகதியொன்றை உறுதி செய்த பொதுச் சங்கம் எது?
(1) திரிதெந்தீன் (2) இரண்டாம் வத்திக்கான் (3) எபேசு
(4) கல்சிடோன் (5) நிசேயா

**28.** இயுத்திகசின் கருத்து, ஒரு பேதகம் என எடுத்துக்காட்டிய ஆயர்,
(1) தூய அத்தனாசியார் (2) தூய சிறில் (3) தூய ஒரிஜன்
(4) தூய பிலேவியன் (5) தூய எவ்சேபியஸ்

**29.** கிறிஸ்தவ சமயம் உயர்ந்தது என்பதை எடுத்துக்காட்ட 'அப்போலோஜஸ்டிக்' என்னும் நூலை ஆக்கியவர்
(1) தூய ஜஸ்டின் (2) தூய தேர்த்தூலியன் (3) தூய ஒறிஜன்
(4) தூய அகஸ்டின் (5) தூய அத்தனாசியார்

**30.** கி.பி 1073 இல், 'VII ஆவது கிறகோரி' என்னும் பெயரில் திருத்தந்தையாக நியமிக்கப்பட்டவர் யார்?
(1) கருதினால் வொல்சே (2) கருதினால் வின்பிறீட்
(3) கருதினால் மெதோடியஸ் (4) கருதினால் டேமியானோ
(5) கருதினால் ஹில்டேபிராண்ட்

**31.** ஆண்டவரின் இறுதி இரவுணவு 'தனி நினைவுகூரல் மட்டுமே' எனக் கூறியவர்
(1) மாட்டின் லூத்தர் (2) யோண் கல்வின்
(3) சுவிங்லி (4) ஜோண் பெசர்
(5) தோமஸ் மூர்

**32.** சீர்திருத்த சபையினரால்கூடப் புகழப்பட்ட தூய பீட்டர் கனீசியஸ் அவர்களால் எழுதப்பட்ட நூல் எது?
(1) கத்தோலிக்க விசுவாசத்தின் மறைக்கல்வி
(2) ஆன்மீக பயிற்சி
(3) திரிதெந்தீன் மறைக்கல்வி
(4) நிறைவாழ்வின் வழி
(5) கிறிஸ்தவ மறை ஒற்றுமை

**33.** பிரான்சு, ரூசிய யுத்தம் ஏற்பட்டமையினால் இடைநிறுத்தப்பட்ட திருச்சங்கம் எது?
(1) திரிதெந்தீனு (2) புளோரன்ஸ்
(3) முதலாம் வத்திக்கான் (4) பரீஸ்
(5) இரண்டாம் வத்திக்கான்

[பக். 6 ஐப் பார்க்க

**34.** 1929 இல் இத்தாலி அரசுடன் செய்துகொண்ட இலாத்திரன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்,

(1) திருத்தந்தை XXIII ஆம் அருளப்பர் (2) திருத்தந்தை VI ஆம் பத்திநாதர்

(3) திருத்தந்தை VII ஆம் பத்திநாதர் (4) திருத்தந்தை XIII ஆம் சிங்கராயர்

(5) திருத்தந்தை XI ஆம் பத்திநாதர்

**35.** 13ஆம் நூற்றாண்டில் உலகில் காணப்பட்ட முக்கிய பல்கலைக்கழகங்கள் நான்கில் ஒன்றாகிய சலமன்கா பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தவர் யார்?

(1) IXஆம் அல்போன்ஸ் அரசன் (2) திருத்தந்தை IVஆம் அலெக்சாண்டர்

(3) சாள்ஸ்மென் அரசன் (4) IV ஆம் அலெக்சாண்டர் அரசன்

(5) மகா அல்பிரட் அரசன்

**36.** உரோமையில் தூய பேதுரு பேராலயத்தின் மக்கள் அமரும் ஆசனங்களுக்கு மேலுள்ள வெண்கல மேற்பந்தலை அமைத்தவர்

(1) லியோனாடோ டா வின்ஸி (2) பிரா அஞ்சலிக்கோ

(3) இறபாயெல் சான்ஸியோ (4) லோறன்சோ பர்னினி

(5) மைக்கல் அஞ்சலோ

**37.** போர்த்துக்கேயரின் உதவியை நாடி கிறிஸ்தவ மதத்தைத் தழுவியபோதும், சீதாவாக்கையில் இராஜசிங்க மன்னனின் ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட்டவுடன் சமயத்தை மறுதலித்த சிங்கள இளவரசன் யார்?

(1) கரலியத்தே பண்டார (2) தொன் யுவான் யமசிங்க

(3) வீரசுந்தர பண்டார (4) ஜெயவீர பண்டார

(5) பிலிப் யமசிங்க

**38.** 1903 இல் காலியில் ஆயராக இருந்த மேன்மை தங்கிய ஜோசப் வான்றீன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட உள்நாட்டு துறவற சபை எது?

(1) தூதர்களின் சகோதரிகள் சபை (2) மரியாயின் பிரான்சிஸ்கன் மறைபரப்பு சபை

(3) ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபை (4) அப்போஸ்தலிக்க கார்மேல் சகோதரிகள் சபை

(5) திருச்சிலுவை துறவற சபை

**39.** பின்வருவன காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கையின் கல்வித்துறையில் காணப்பட்ட சிலவகைப் பாடசாலைகள் ஆகும்.

A - கோயில்பற்றுப் பாடசாலை

B - மிஷனரிப் பாடசாலை

C - குருமடங்கள் (செமனேரி)

D - அநாதைகள் இல்லம்

E - பிரிவெனாப் பாடசாலைகள்

More Past Papers at
tamilguru.lk

இவற்றில் ஒல்லாந்தர் காலத்தில் காணப்பட்ட பாடசாலைகளை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?

(1) A, B, C (2) A, C, D (3) A, C, E

(4) B, C, D (5) C, D, E

**40.** 'பாதுகாவலன்' என்பது,

(1) இலங்கையில் பழமைவாய்ந்த தமிழ் கிறிஸ்தவ சஞ்சிகையாகும்.

(2) இலங்கையில் மிகப் பழமைவாய்ந்த சஞ்சிகையாகும்.

(3) இலங்கையில் பழமைவாய்ந்த பத்திரிகையாகும்.

(4) முதலாவது தமிழ் கிறிஸ்தவ நாட்டார் எழுத்தாக்கமாகும்.

(5) இலங்கையின் முதலாவது கத்தோலிக்க தமிழ் சஞ்சிகையாகும்.

[பக். 7 ஐப் பார்க்க

41. திருவிவிலியத்தின் இலகுவான சம்பவங்களைச் சித்திரமாக வரைந்தவரும், நீர்கொழும்பில் பெரிய தெருவில் அமைந்துள்ள புனித மரியாள் ஆலயத்தின் அடிக்கூரையில் ஓவியங்களை வரைந்தவருமான பௌத்த ஓவியக் கலைஞர்

(1) என். எஸ். கொடமான (2) பெசில் நவரத்ன
(3) போல் நவரத்ன (4) முகந்திரம் முதியன்சே
(5) சோலியஸ் மெண்டிஸ்

42. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் கடுமையான கொலரா நோய் காணப்பட்ட வேளையில் நோயளிகளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, அதே நோயால் பீடிக்கப்பட்டு இறைபதமடைந்தவர் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த

(1) அருட்பணி ஜெரமியோ ஆவார். (2) அருட்பணி நோபிலே ஆவார்.
(3) அருட்பணி ஜோசப் கரவல்லோ ஆவார். (4) அருட்பணி பியரே பர்குவின் ஆவார்.
(5) அருட்பணி பிலிக்ஸ் அலெக்சாண்டர் ஆவார்.

43. திருத்தூதர் காலத்தில் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெறுவதற்காக இதயபூர்வமான மனஸ்தாபத்தைப் போன்று, இன்னும் தேவைப்பட்டது,

(1) தாம் செய்த பாவங்களை உச்சரித்தலாகும்.
(2) ஆன்மீக ஆயத்தமாகும்.
(3) ஒரு சந்தி அனுசரித்தலாகும்.
(4) நெற்றியில் விபூதி அணிதலாகும்.
(5) கைகளைச் சுத்தம் செய்தலாகும்.

44. கீழைத்தேய கத்தோலிக்க வழிபாடுகளின் முக்கிய பண்பு

(1) கம்பீரத்தன்மை (2) அடக்கமாக இருத்தல்
(3) பண்பாட்டுமயமாக்கப்பட்டிருத்தல் (4) அறிவுக்கு எட்டும் தன்மை
(5) உயர் தரமானதன்மை

45. "மாபெரும் மீட்பின் செயற்பாட்டில் நேரடியாகத் தொடர்புடைய ஒன்றியம்" என திருச்சபையை அறிமுகப்படுத்தியவர்,

(1) பிவ்ரான் ஆவார். (2) தூய சிப்பிரியான் ஆவார்
(3) தூய தோமஸ் அக்குவைனாஸ் ஆவார். (4) காள் ரானர் ஆவார்.
(5) தூய அகுஸ்தீனார் ஆவார்.

46. நற்கருணைக்குச் செய்யும் வணக்க ஆராதனைகளைப் போன்று அதனுடன் தொடர்புடைய பல்வேறு பக்தி முயற்சிகளில் கவனம் செலுத்தியுள்ள சுற்றுமடல் எது?

(1) மிஸ்ரேரியும் பீதெயி (2) எக்லேசியா த எயுக்கரசிதியா
(3) லூமென் ஜென்சியும் (4) சக்கிரமெண்டும் யுனிடாடிஸ்
(5) மிடியாதோர் தேயி

47. தூய லூக்காவும் தூய பவுலும் கூறும் "இயேசு, அப்பம், கிண்ணம் என்பவற்றின் மீது நன்றி கூறினார்" என்பது எம்மரபைச் சேர்ந்தது?

(1) அலெக்சாந்திரியா (2) பலஸ்தீனம்
(3) அம்புறோசியான் (4) கலிக்கான்
(5) செல்திக்

[பக். 8 ஐப் பார்க்க

**48.** "மனிதனின் உன்னத தன்மை நிலைத்திருப்பது, அவனுக்கே தனித்துவமான மனச்சான்றிலாகும்" என மனிதனின் மாண்பைப் பற்றிக் குறிப்பிடுவது,

(1) கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வியாகும்.

(2) கத்தோலிக்க திருச்சபையின் பெரிய குறிப்பிடமாகும்.

(3) இன்றைய உலகின் திருச்சபை என்னும் வெளியீடாகும்.

(4) கிறிஸ்தவ திருச்சபை ஒன்றிப்பு என்னும் வெளியீடாகும்.

(5) அவனியில் அமைதி என்னும் சுற்றுமடலாகும்.

**49.** பப்டிஸ்ட் திருச்சபை இலங்கையில் தம் பணியை ஆரம்பித்த பிரதேசம் எது?

(1) காலி (2) கிராண்பாஸ் (3) குருணாகல்

(4) முகத்துவாரம் (5) கண்டி

**50.** கிறிஸ்தவம் அல்லாத பிறசமயங்கள் பற்றிய திருச்சபையின் கண்ணோட்டமும் மனப்பாங்கும் தொடர்பாகக் கவனம் செலுத்துவதற்காக செயலகமொன்றை நிறுவுவதற்கு முன்நின்றவர்

(1) திருத்தந்தை XI ஆம் சிங்கராயர்

(2) திருத்தந்தை XIII ஆம் சிங்கராயர்

(3) திருத்தந்தை II ஆம் அருளப்பர் சின்னப்பர்

(4) திருத்தந்தை VI ஆம் சின்னப்பர்

(5) திருத்தந்தை XXIII ஆம் அருளப்பர்

* * *

More Past Papers at
tamilguru.lk

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ක්‍රිස්තියානි ධර්මය II
கிறிஸ்தவம் II
Christianity II

43 T II

07.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்:**

* பகுதி **I** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும், பகுதி **II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) திருவிவிலியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான காரணிகள் **நான்கையும்** எழுதுக.

(ii) இஸ்ராயேலின் மீட்பின் வரலாற்றிலே இறைவாக்கினர் பற்றிய எண்ணக்கருவின் வளர்ச்சியினைக் காணக்கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்த **நான்கு** காரணிகள் தருக.

(iii) தூய பவுலின் முதலாவது மறைத்தூதுப் பயணத்தில் லிஸ்திராவில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்கள் **நான்கு** எழுதுக.

(iv) மத்திய காலத்தில் திருவிவிலியத்தைக் கற்கும்போது பயன்படுத்தப்பட்ட **நான்கு** வித விளக்கங்களையும் எழுதுக.

(v) ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் பணியாற்றிய பிலிப்புஸ் பல்தேவுஸ் அடிகளாரால் நிறைவேற்றப்பட்ட பணிகள் **நான்கினை** எழுதுக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

**2.** (i) விடுதலைப் பயண நூல் 15:1-21 வரையான பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மோசேயின் வெற்றிப்பாடலில் அடங்கியுள்ள பிரதான விடயங்கள் **நான்கினையும்** எழுதுக.

(ii) புதுமைகள் என்றால் என்னவென விளக்கும் காரணிகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(iii) திருத்தந்தை XIIIஆம் சிங்கராயர், 1878-1903 காலப்பகுதியில் தாம் எழுதிய சுற்றுமடல்களுக்குக் கருப்பொருளாகக் கொண்ட விடயங்கள் **நான்கினை** எழுதுக.

(iv) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உதயமான முழுமையான சமய சுதந்திரத்தின் மூலம் பயனைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கையில் ஒறத்தோரியன் சபைக் குருக்கள் செயற்பட்ட விதத்தை எடுத்துக்காட்டுவதற்கு **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக.

(v) பிற்காலத்தில் திருவழிபாட்டிற்கு உரோமைக் கலாசார மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற செல்வாக்குகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

**3.** (i) எசாயா 11:1-9இன் படி அமைதியின் அரசின் (நீதியுள்ள அரசரின்) பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(ii) கி.பி 431 இல் கூட்டப்பட்ட எபேசு பொதுச்சங்கத்தில் நெஸ்தோரிய பேதகத்தினைக் கண்டனம் செய்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள் **நான்கினையும்** குறிப்பிடுக.

(iii) அண்மைக்காலத்தில் உரோமையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின்போது கண்டுபிடிக்கப்பட்ட டொமிற்றில்லாவின் சுரங்கக் கல்லறையிலிருந்து கிடைக்கப்பெற்ற கிறிஸ்தவ சுவர்ச் சித்திரங்களுக்குக் கருப்பொருளாக அமைந்த திருவிவிலியக் கதைகள் **நான்கினைப்** பெயரிடுக.

[பக். 2 ஐப் பார்க்க

(iv) பின்வரும் ஒவ்வொரு துறவற சபையையும் ஆரம்பித்தவர்களைப் பெயரிடுக.

(அ) செல்டிக்

(ஆ) கமல்டோலெஸ்

(இ) கார்த்தூஷியன்

(ஈ) சிஸ்டர்சீயன்

(v) இலங்கைத் திருச்சபையின் சமயங்களுடனான உரையாடலின் பெறுபேறுகள் **நான்கு** எழுதுக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (i) சமநோக்கு நற்செய்தியின் ஆசிரியத்துவம், அது எழுதப்பட்ட காலம் என்பன பற்றி முன்வைக்கப்பட்டுள்ள முடிவுகள் **ஐந்தினைச்** சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) கிறிஸ்துநாதரின் 'மலைப்பொழிவு' உமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு எவ்வாறு முக்கியத்துவமுடையதாய் அமையும் என்பதை அதன் நோக்கத்துடன் தொடர்புபடுத்தி **ஐந்து** உதாரணங்கள் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

**5.** (i) "அன்று திருச்சபை ஐரோப்பாவில் கல்வியை முன்னேற்றுவதற்கு எடுத்த முயற்சி ஐரோப்பாவிற்கு மட்டுமன்றி முழு உலகத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாய் அமைந்தது." இவ்வெளிப்பாட்டிற்கமைய கல்விக்கான கிறிஸ்தவ திருச்சபையின் அர்ப்பணிப்பை **ஐந்து** விடயங்களின் ஊடாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) திருச்சபையின் ஆரம்பகாலத்தில் கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் இடையேயான மோதல்களுக்கு ஏதுவான காரணிகளைச் சுருக்கமாக விளக்கி, இலங்கையில் மதங்களுக்கிடையேயான ஒற்றுமையை வளர்ப்பதற்கான ஆலோசனைகள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

**6.** (i) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கைக்கு வருகைதந்த மறைப்போதகர்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகளை **ஐந்து** காரணிகள் ஊடாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) மனிதனின் மாண்பு பற்றிக் கத்தோலிக்க திருச்சபை மறைக் கல்வியில் குறிப்பிடப்படும் படிப்பினைகளை உமது வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி **ஐந்து** காரணிகளின் ஊடாக விளக்குக. (10 புள்ளிகள்)

**7.** (i) தூய யோசப்வாஸ் அடிகளார் ஆற்றிய இரக்கப் பணிகள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த சில்வெஸ்டர் பெனடிக்ற் சபை மறைத்தூதுவர்களின் பணி தொடர்பான **ஐந்து** விடயங்களைக் குறிப்பிட்டு விவரிக்குக. (10 புள்ளிகள்)

**8.** (i) அருட்தந்தை கிறிஸ்டோப்பர் பொன்ஜீன் அடிகளாரின் வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அடிகளார் உதவிபெறும் பாடசாலை (சுவீகரிக்கப்பட்ட பாடசாலை) முறை தொடர்பாக முன்வைத்த ஆலோசனைகள் **ஐந்தினைத்** தருக. (10 புள்ளிகள்)

(ii) இன்றைய இலங்கைக் கிறிஸ்தவ திருச்சபையின் மூலம் நிறைவேற்றப்படும் தூதுப்பணியை மதிப்பிட்டு, கிறிஸ்தவ மாணவராக அதற்கான உமது ஒத்துழைப்புகளை **ஐந்து** காரணிகள் மூலம் விவரிக்குக. (10 புள்ளிகள்)

* * *